இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 15-10-2024

# பட்டினி பட்டியலும் பகவத் பேச்சும்!

**127 நாடுகளைக் கொண்ட உலகளாவிய பட்டினி குறியீடு பட்டியலில் பா.ஜ.க.வின் பாரத தேசம், 105 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. உலக பட்டினி குறியீட்டில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கையை விட மிகவும் மோசமான இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. இதன் மூலமாக பட்டினி விவகாரத்தில் தீவிர பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் பிரிவில் இந்தியா இடம் பெற்றுள்ளது.**

சிறந்த மதிப்பெண்ணைப் பெற்ற நாடுகள் சீனா, ரஷ்யா, குவைத், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட 21 நாடுகள் ஆகும்.

**சோமாலியாவை அனைவர்க்கும் தெரியும். பசி, பஞ்சம், பட்டினியின் அடையாளமாக அந்த நாட்டைச் சொல்வோம். 127 நாடுகள் கொண்ட அந்தப் பட்டியலில் 127 ஆவது இடத்தில் சோமாலியா இருக்கிறது. 44.1 குறியீட்டுப் புள்ளிகளை அந்த நாடு பெற்றுள்ளது. இத்தகைய பட்டியலில் 27.3 குறியீட்டுப் புள்ளிகளைப் பெற்று இந்தியா 105 ஆவது இடத்தில் இருப்பது அவமானம் இல்லையா? இதற்கு என்ன சொல்கிறார் இந்தியப் பிரதமர்? மன்னிக்கவும்! 'பாரதப்' பிரதமர்?**

பசியின் அளவை அறிவதற்கான கருவியாக ஊட்டச்சத்து குறைபாடு, குழந்தைகளின் பிறப்பு - இறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச பட்டினி குறியீடு உருவாக்கப்படுகிறது. சர்வதேச குறியீட்டின் 19 ஆவது பதிப்பை அயர்லாந்தைச் சேர்ந்த மனிதநேய அமைப்பான 'கன்சர்ன் ஓல்டு வைட்', ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த நிறுவனமான 'வெல்ட் ஹங்கர் லைப்' ஆகிய அமைப்புகள் வெளியிட்டுள்ளன. இந்த பட்டியலில் இந்தியாவின் நிலைமை மிக மோசமானதாக அமைந்துள்ளது.

**127 நாடுகளைக் கொண்ட பட்டியல் இது. இதில் இந்தியா 105 ஆவது இடத்தில் இருக்கிறது. இந்திய நாட்டின் மக்கள் தொகையில் 13.7 விழுக்காடு மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டுடன் இருக்கிறார்கள். ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் 35.5 விழுக்காடு பேர் வளர்ச்சி குன்றியவர்களாக இருக்கிறார்கள். இதில் 18.7 விழுக்காடு குழந்தைகள் எடை குறைந்தவர்களாக இருக்கிறார்கள். இதில் 2.9 விழுக்காடு குழந்தைகள் ஐந்து வயதுக்கு முன்பே இறந்துவிடுகிறார்கள் என்கிறது இந்த அறிக்கை.**

இந்த செய்தி அறிக்கை அக்டோபர் 12 அன்று நாளிதழ்களில் வெளியாகி இருக்கிறது. அதே நாளிதழ்களின் இன்னொரு பக்கத்தில் வெளியான செய்தியைப் பார்க்கும் போது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. "கடந்த சில ஆண்டுகளில் இந்தியா வலிமை மிக்க தேசமாகவும், மதிப்பிற்குரியதாகவும் உருவெடுத்துள்ளது" என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பகவத் பேசி இருக்கிறார்.

நாக்பூரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய மோகன் பகவத், "கடந்த சில ஆண்டுகளில் நம்பகத்தன்மையால் இந்தியா உலக அளவில் வலிமைமிக்க தேசமாகவும், மதிப்புக்குரியதாகவும் உருவெடுத்துள்ளதை அனைவரும் உணர்ந்துள்ளனர். குடிமக்களின் தேசிய சிந்தனையால் நாடு உயர்வை அடைந்துள்ளது" என்று குறிப்பிட்டார். ஒருவிதமான கற்பனாவாத நாட்டை நம் கண்முன் நிறுத்தப் பார்க்கிறார் மோகன் பகவத். 'எல்லோரும் நல்லவரே' என்பதைப் போன்ற மாயத்தோற்றத்தை உருவாக்கப் பார்க்கிறார். 'தேசிய சிந்தனையால் நாடு உயர்வை அடைந்துள்ளது' என்று எதை வைத்துச் சொல்கிறார். மூன்றாவது முறையும் பா.ஜ.க.வுக்கு வாக்களித்ததை வைத்துச் சொல்கிறாரா?

எதிரி நாடுகள் குறித்துப் பேசிய மோகன் பகவத், ஏழ்மையைப் பற்றியோ பட்டினியைப் பற்றியோ பேசவில்லை. இந்தியாவின் அனைத்து வகைப்பட்ட வளர்ச்சியைப் பற்றி பேசவில்லை. வளர்ச்சிக் குறியீடுகள் பற்றி பேசவில்லை. வேலைவாய்ப்புகள் பற்றியோ, இளைஞர் நலன் குறித்தோ, பெண்கள் மேம்பாடு குறித்தோ பேசவில்லை. அதைப் பற்றி எல்லாம் அவருக்கு கவலையும் இல்லை. அவர் அமைப்புக்கும் அக்கறை இல்லை.

**இத்தகைய கற்பனை மாயையில்தான் பிரதமர் மோடியும் இருக்கிறார் என்றே தெரிகிறது. மோகன் பகவத் பேச்சைக் குறிப்பிட்டு சமூக வலைதளத்தில் கருத்து வெளியிட்டுள்ள பிரதமர் மோடி, "வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு புதிய சக்தியை பாய்ச்சுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். வளர்ச்சி அடைந்த பாரதமா, கடந்த பத்தாண்டு காலம் என்பதை அவர் பட்டியல் போட்டு விளக்கத் தயாராக இருக்கிறாரா? பா.ஜ.க. ஆட்சியில் எந்தெந்த வகைப்பட்ட வளர்ச்சிகள் நடைபெற்றுள்ளது என்பதை விளக்கும் துணிச்சல் பா.ஜ.க.வுக்கு உண்டா?**

ஒன்றிய அரசின் நிதி ஆயோக் வெளியிட்ட 2022-23 ஆம் ஆண்டுக்கான அறிக்கைப்படியே பா.ஜ.க.வின் பாரதம் மகிழ்ச்சிக்குரிய குறியீட்டில் இல்லையே!

* **வறுமையின்மையில் இந்திய விழுக்காடு 72.**
* **பட்டினி ஒழிப்பில் இந்திய விழுக்காடு 52.**
* **தரமான கல்வியை வழங்குவதில் இந்திய விழுக்காடு 61.**
* **பாலின சமத்துவத்தில் இந்திய விழுக்காடு 49.**
* **குறைந்த விலை, சுத்தமான ஆற்றல் குறியீட்டில் இந்தியா 68.**

- என்று சொன்னது பா.ஜ.க.வின் நிதி ஆயோக்தான். இந்த அறிக்கைகளின் மீது எடுக்கப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன? அதை யாவது பா.ஜ.க. அரசு சொல்லுமா?

சர்வதேச அறிக்கைகள் வெளியிடுவதன் நோக்கம், இது போன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் இவற்றைப் பற்றி எல்லாம் பா.ஜ.க.வுக்கு கவலை இல்லை. இது தொடர்பான முந்தைய அறிக்கைகள் குறித்து மக்களவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் கேள்வி எழுப்பிய போது, "இது போன்ற அறிக்கைகளை பொருட்படுத்தத் தேவையில்லை" என்று அமைச்சர் அன்னபூர்ணா தேவி குறிப்பிட்டார். எதை பொருட்படுத்த வேண்டும், எதைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்று அவர் சொன்னால் நல்லது.

**'ஏழைத்தாயின் மகன்' இதில் கவனம் செலுத்தவும்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.10.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபகோயிலான கிருஷ்ணாபுரம், வெங்கடாஜலபதி திருக்கோயிலில் 5.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெப்பக்குளம் சீரமைக்கும் பணி, வேத பாடசாலை மற்றும் கருணை இல்லம் கட்டும் பணி, புதிதாக அன்னதானக் கூடம் கட்டும் பணி, சரவணப் பொய்கையில் செயற்கை நீரூற்றுகள், வண்ண விளக்குகள், நடைபாதையுடன் கூடிய அழகிய பூங்காவாக புனரமைக்கும் பணி ஆகிய 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 68.36 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி, முடி காணிக்கை மண்டபம், சுகாதார வளாகங்கள், நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம் ஆகிய 4 முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தலையொட்டி

# 'லைட்டர்' உதிரி பாகங்கள் இறக்குமதிக்குத் தடை!

## ஒன்றிய அரசு நடவடிக்கை!

புதுடெல்லி, அக். 15 -

உள்நாட்டு தீப்பெட்டி உற்பத்தியை ஊக்குவிக்கும் மற்றும் சீனப்பொருள்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் சிகரெட் 'லைட்டர் உதிரி பாகங்களின் இறக்குமதிக்கு ஒன்றிய அரசு தடை விதித்துள்ளது. இதுதொடர்பான அறிவிக்கையை வெளியுறவு வர்த்தக இயக்குநரகம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டது.

தென் தமிழகத்தில் வேலை வாய்ப்பு அளிக்கும் முக்கியத் தொழில் ஆதாரமாக தீப்பெட்டி உற்பத்தி திகழ்கிறது. இந்நிலையில், சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து மலிவு விலையில் பிளாஸ்டிக் லைட்டர்களை இறக்குமதி செய்து, இந்திய சந்தையில் அவை விற்கப்படுவது இத்துறைக்கு பாதிப்பை ஏற்படுத்தி வந்தது.

இதைக் கருத்தில்கொண்டு பிளாஸ்டிக் லைட்டர்களுக்கு தடை விதிக்குமாறு ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022-ஆம் ஆண்டு செப்டம்பரில் வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து, ரூ.20க்கும் குறைவான விலை கொண்ட அனைத்து வகை லைட்டர்களின் இறக்குமதிக்கு ஒன்றிய அரசு தடை விதித்தது.

அதேபோல், தரநிலை கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் லைட்டர்கள் கொண்டு வரப்பட்டன. இதன் மூலம், இந்திய தரநிலை ஆணையத்தின் (பி.ஐ.எஸ்.) முத்திரையில்லாத லைட்டர்களை இந்தியாவில் விற்பனை அல்லது வர்த்தகம் செய்ய முடியாது. நடப்பு நிதியாண்டில் முதல் 4 மாதங்களில் லைட்டர் உதிரி பாகங்களின் இறக்குமதி 38 லட்சம் டாலராக இருக்கிறது.

கடந்த ஆண்டு 48.6 லட்சம் டாலர் மதிப்பில் வர்த்தகம் நடந்துள்ளது. இதில் பெரும்பான்மை சீன இறக்குமதி ஆகும்.

இந்தச் சூழலில், லைட்டர் உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

### பருவமழையை எதிர்கொண்டு மக்களுக்கு உதவிட

# கழக நிர்வாகிகள் தயார் நிலையில் இருக்கவும்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

**சென்னை, அக்.15 -**

**வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள கழகத் தலைவர்-முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் அரசின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோர் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, அரசு இயந்திரத்தை முடுக்கி விட்டுள்ளனர்.

மாவட்டங்களுக்கான பொறுப்பு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்டோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் உரிய அறிவுரைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் தயார் நிலையில் இருந்தாலும், பொதுமக்கள் தங்களது குறைந்தபட்சத் தேவைகளைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஓரிரு நாட்களுக்குத் தேவையான அளவில் அரிசி, பருப்பு, எண்ணெய், முட்டை, காய்கறிகள், குழந்தைகளுக்கான பிஸ்கட், தின்பண்டங்கள் ஆகியவற்றைக் கையிருப்பில் வைத்திருப்பதோடு, இரண்டு மூன்று நாட்களுக்குத் தேவையான துணி, மெழுகுவத்தி, தீப்பெட்டி, கொசுவத்தி, சானிட்டரி நாப்கின் உள்ளிட்ட பொருட்கள் வீட்டில் உள்ளனவா என்று கவனித்து வைத்துக் கொள்ளுங்கள். இல்லாத பொருட்களை மட்டும் அளவாக வாங்கிக் கொள்ளவும்.

குடிநீரைத் தேவையான அளவு சேமித்து வைத்துக் கொள்வதோடு, தேவையான மருந்து மாத்திரைகளையும் கையிருப்பில் வைத்துக் கொள்ளவும்.

செல்போன்கள், லேப்டாப், பவர் பேங்க் இருப்பின் அவற்றை முழுமையான சார்ஜ் செய்து வைத்துக் கொள்ளுங்கள். பதற்றப்படவோ பயப்படவோ தேவையில்லை. தேவைக்கு அதிகமாக வாங்கிக் குவிக்க வேண்டிய அவசியமுமில்லை.

பெரும்பாலான மக்கள் இத்தகைய தயார் நிலையில் இருப்பின், அரசாங்கத்தின் முழுமையான கவனத்தை இத்தகைய தயார் நிலைக்குக் கூட வாய்ப்பில்லாத ஏழை எளிய மக்களின் மீது செலுத்தலாம்; அவர்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாகச் செய்து விரைவில் இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியும்.

மழையை எதிர்கொள்ள அரசாங்கம் முழு அளவில் தயாராக உள்ளது. ஒரு வேளை இயற்கை வழக்கத்திற்கு மாறாகப் பெருமழைப்பொழிவை ஏற்படுத்தினாலும் சரியான முன்னெச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் மழைக் காலத்தை எதிர்கொள்வோம். பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிடும் வகையில் அரசுடன் கழகமும் களத்தில் துணையாக நிற்க வேண்டும் என கழக உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒன்றிய, பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்களைத் தயார் நிலையில் இருக்கும்படி மாவட்டக் கழகச் செயலாளர்கள் அறிவுறுத்த வேண்டும். கவுன்சிலர்கள் தங்கள் வார்டுகளிலேயே முழுமையாக இருந்து மக்களுக்கு உதவிட வேண்டும்.

மழைக்காலத்தில் கழகத்தினர், அரசு பொதுமக்கள், தன்னார்வலர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். பொதுமக்களும் தன்னார்வலர்களும் முன்வைக்கின்ற கோரிக்கைகள், மழை தொடர்பாக தெரிவிக்கின்ற தகவல்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அது தொடர்பான மேல் நடவடிக்கைக்கு கழக நிர்வாகிகள் வழிவகை செய்யலாம். குறிப்பாக, களத்தில் தன்னார்வலர்களுடன் கை கோத்து, பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை அரசிடமிருந்து பெற்றுத் தருவதற்கான தலையாயப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மழையினால் பாதிக்கப்படும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பொருட்களை வாங்கித் தருவதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொள்வது அவசியம். குடிநீர், பால் ஆகிய இரண்டும் மிக அவசியமான தேவையாக இருக்கும். எனவே தங்கள் பகுதிகளில் அவை தடையின்றிக் கிடைக்கின்றனவா என்பதைக் கண்காணித்து, தேவையான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும். மீட்புப்பணிகளை மேற்கொள்ள வரும் மாநகராட்சி, மின்வாரிய ஊழியர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, பணிகள் முழு வீச்சில் நடைபெறுவதை உறுதிசெய்திட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில்

# தூத்துக்குடியில் நெய்தல் கலை விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள்!

## பல்வேறு கலை நிகழ்ச்சிகள் – புகைப்படக் கண்காட்சி – பரிசுகள் வழங்கல்!

*தூத்துக்குடி, அக். 15 -*

*ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கண்டுகளித்த நெய்தல் கலைவிழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சிகள் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் கழக குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் கடந்த இரண்டு ஆண்டுகளாக தூத்துக்குடியில் நெய்தல் என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரிய கலைகளை வளர்க்கும் வகையில் பிரம்மாண்ட கலைத் திருவிழா நடைபெற்று வருவதன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக இந்நிகழ்ச்சி தூத்துக்குடி எட்டயபுரம் சாலை, சங்கரப்பேரி பிரிவு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெற்று வருகிறது.*

*கடந்த இரண்டு நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் (13.10.2024 - ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற நிறைவு விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றி, இந்நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றும் இந்நிகழ்ச்சிக்காக உழைத்தவர்களுக்கு நினைவு பரிசினை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நெய்தல் கலைவிழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் தூத்துக்குடி இசைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி, சகா கலைக்குழு, அந்தோணி சாமியின் உவரி களியல் ஆட்டம், மார்த்தாண்டம் ஜெட் கிங் களரி குழு, பாப்பம்பட்டி பெரிய மேளம், கார்த்திக் தேவராஜ் இசைக்குழு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தல் கலைவிழாவினை கண்டு களித்தனர்.*

*முன்னதாக, நெய்தல் கலை விழாவையொட்டி நடைபெற்று வரும் புகைப்படக் கண்காட்சி அரங்கு, புத்தக அரங்கு மற்றும் நபார்டு வங்கியின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு விற்பனை அரங்குகளை பார்வையிட்டு, சிறைக்கைதிகளுக்கு புத்தகங்கள் வழங்கிடும் வகையில் அமைக்கப் பட்டுள்ள அரங்கில் பல்வேறு புத்தகங்களை வழங்கினார்.*

*புகைப்படக் கண்காட்சியில் 1500 துணை படங்கள் தேர்வு செய்யப்பட்டு 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் மிகச்சிறந்த புகைப்படத்திற்கு முதல் பரிசாக ரூபாய் 1 லட்சம் வெற்றி பெற்ற ரூபன் ராஜ், இரண்டாம் பரிசாக ரூபாய் 50,000 வெற்றி பெற்ற வே. சரவணக்குமார், ஆறுதல் பரிசாக தலா ரூபாய் ஐந்தாயிரத்தை கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வழங்கினார்.*

*இதில், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்கண்டேயன், எம்.சி.சண்முகையா மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், ராஜா, தமிழரசி, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ராமன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஜெயபாலன், இ.எப்.ஐ. நிறுவனர் அருண் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.*